# சின்ன வயதிலிருந்தே என்னைச் சுற்றி இருந்ததும் – எனக்குத் தெரிந்ததும் அரசியல் மட்டும்தான்!

## கொளத்தூரில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... 5–ஆம் பக்கத் தொடர்ச்சி



அன்போடு முத்தம் தந்து, என் பேனாவை அன்பளிப்பாகத் தந்தேன். அந்தக்காட்சியை என்னால் மட்டுமல்ல, தமிழ்நாட்டில் யாராலும் மறக்க முடியாது.

அதேபோன்றுதான், தமிழ்ப்புதல்வன் திட்டம்,

‘உலகம் உங்கள் கையில்’ லேப்டாப் வழங்கும் திட்டம்,

மாவட்டம்தோறும் மாடல் பள்ளிகள்,

மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நூலகம் என இன்னும் நிறைய இருக்கின்றன!

**கழக அரசின் சாதனைப் பட்டியலை சொல்லிக்கொண்டே போகலாம்!**

நலன் காக்கும் ஸ்டாலின் முகாம்கள், ‘இன்னுயிர் காப்போம் – நம்மைக் காக்கும் 48’ இப்படி பல பட்டியலை நான் சொல்லிக் கொண்டே இருக்க முடியும்.

தொழில்துறை என்று எடுத்துக் கொண்டால், தமிழ்நாடு முழுவதும் இன்றைக்கு அனைத்து மாவட்டங்களிலும் சிப்காட் தொழிற்பூங்கா, சிறிய மாநகரங்களில் கூட டைடல் பூங்காக்கள் என்று தமிழ்நாடு இப்படி வளர்ந்து வருகிறது.

**விளையாட்டு வீரர்களுக்கு உபகரணங்கள் வழங்கும் திட்டம்.**

வீட்டுவசதியை எடுத்துக் கொண்டால், ‘கலைஞர் கனவு இல்லம்’ திட்டத்தில் சொந்த வீடு எனும் கனவு நனவான யாராலும் ஸ்டாலினை நிச்சயமாக மறக்க முடியாது;

அதோடு, நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலமாக ஏழை மக்களுக்கான அடுக்குமாடி குடியிருப்புகள், பல ஆண்டு கனவாக இருந்த 23 லட்சம் பேருக்கு இலவச பட்டா. வயதானவர்களுக்கும் மாற்றுத் திறனாளிகளுக்கும் ‘தாயுமானவர்’ திட்டத்தில் வீடு தேடி ரேஷன் பொருள் சேரும்போது, அவர்கள் நிச்சயம் இந்த ஸ்டாலினை வாழ்த்துவார்கள்.

ஆன்மீகமா? சொல்ல வேண்டிய அவசியமே இல்லை.

**அரசு ஊழியர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றம்!**

அதேபோன்று, அரசு ஊழியர்களுக்கு எப்படிப்பட்டக் கோரிக்கையை நிறைவேற்றிக் கொடுத்தோம் என்று உங்கள் அனைவருக்கும் தெரியும். இப்படி துறை வாரியாக நிறைய இருக்கிறது.

அதனால்தான் சொல்கிறேன்... சிறந்த உட்கட்டமைப்புக்குத் தமிழ்நாடுதான்! சிறந்த கல்விக்குத் தமிழ்நாடுதான்! மருத்துவத்திற்குத் தமிழ்நாடுதான்! தொழில் முதலீட்டுக்குத் தமிழ்நாடுதான்! சட்டம் – ஒழுங்குக்குத் தமிழ்நாடுதான்! அமைதிக்கும் மதநல்லிணக்கத்திற்கும் தமிழ்நாடுதான்! இப்படி எல்லாத் துறையிலும் சிறக்க உழைப்பவன்தான் இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்.

இப்போது நான் இந்த அளவிற்குத் திட்டங்களைப் பட்டியல் போட்டுச் சொன்னேன் இல்லையா? இது எதையும் நான் ஏதோ நினைத்ததும் செய்துவிடவில்லை. ஒவ்வொன்றுக்கும் எத்தனையோ சோதனைகள் வந்தன. கொரோனா அலை உச்சத்தில் இருக்கும்போதுதான் நாம் ஆட்சிக்கே வந்தோம். ஒவ்வொரு ஆண்டும் வெள்ளம், புயல் போன்ற இயற்கை பேரிடர்கள் ஒருபக்கம், தமிழ்நாட்டுக்குரிய நிதியைத் தராமல் ஒன்றிய பா.ஜ.க. அரசு உருவாக்கியது. அது ஒரு கொடுமை. ஆளுநர் மூலமாக நிர்வாகத்தில் நெருக்கடி என இப்படி அனைத்துத் தடைகளையும் கடந்துதான், நான் சொன்ன சாதனைகளையெல்லாம் செய்திருக்கிறோம்.

அந்தச் சீரழிவிலிருந்து தமிழ்நாட்டை மீட்டு, 11.19 விழுக்காடு சாதனை வளர்ச்சியை, இந்தியாவில் வேறு எந்த மாநிலமும் அடையாத இரட்டை இலக்க வளர்ச்சியைச் சாதித்துக் காட்டியிருக்கிறோம்.

உலகம் முழுவதும் வெளியாகும் ‘எக்கனாமிஸ்ட்’ பத்திரிகையே, தமிழ்நாட்டைப் புகழ்ந்து ‘Superstar State’ என எழுதுகிறார்கள். இப்படி தமிழ்நாட்டைச் சூப்பர்ஸ்டார் ஆக்கிய இந்த முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினின் ஆட்சி தொடர வேண்டுமா? வேண்டாமா? சொல்லுங்கள்.

**தமிழ்நாட்டின் திட்டங்களை பிற மாநிலங்கள் பின்பற்றுகின்றன!**

திராவிட மாடல் தமிழ்நாட்டில் நிறைவேற்றும் திட்டங்கள் அனைத்தும், இன்றைக்கு மற்ற மாநிலங்களுக்கும் மாடலாக அமைந்திருக்கின்றன. தமிழ்நாட்டுக்கு வந்து பார்த்து, அவர்கள் மாநிலங்களிலும் இதை செயல்படுத்துகிறார்கள்.

அதேபோன்று, நான் டெல்லியில் ஆம் ஆத்மி ஆட்சி செயல்படுத்திய மாடல் பள்ளிகள், நகர்ப்புற கிளினிக்குகள் உள்ளிட்ட திட்டங்களை ஆய்வு செய்து, நம் ஊரில் அதை இன்னும் மேம்படுத்திச் செயல்படுத்துகிறோம். இப்படி ஒரு ஆரோக்கியமான வளர்ச்சி அரசியலுக்கு வித்திட்டிருக்கிறோம். இன்னும் சொல்ல வேண்டும் என்றால், இன்று எதிர்க்கட்சிகளே நாம் இப்போது நிறைவேற்றிக் கொண்டு வரும் திட்டங்களைத்தான், பெயரை மட்டும் மாற்றி அவர்களுடைய தேர்தல் அறிக்கையாக வெளியிட்டிருக்கிறார்கள். இதுதான் உண்மை!

ஆனால், நம்மை எதிர்த்து நிற்பவர்கள் யார் என்று பார்த்தீர்களா? “பா.ஜ.க.-வால்தான் 2021 சட்டமன்றத் தேர்தலில் தோற்றோம், இனி அவர்களோடு கூட்டணி இல்லை” என்று சொன்னவர் எடப்பாடி பழனிசாமி! டெல்லியிலிருந்து இரண்டு ரெய்டு நடந்தவுடனேயே பயந்துபோய், கர்ச்சிப்பால் முகத்தை மறைத்துக் கொண்டே, சட்டமன்றத்தைக்கூட விட்டுவிட்டு, வேறு வேறு காரில் டெல்லி சென்று, கூட்டணி வைத்துவிட்டு வந்தார். சரி, அந்தக் கூட்டணிக்காவது இவர்தான் தலைமையா என்று கேட்டால் அதுவும் கிடையாது!

சினிமாவில் வருவதுபோல், “மாப்பிள்ளை இவர்தான், ஆனால் இவர் போட்டிருக்கும் சட்டை இன்னொருவருடையது” எனச் சொல்வது போன்று, இவர்களின் குடுமி டெல்லியிடம் இருக்கிறது. அனைத்து முடிவுகளும் அங்கிருந்துதான் எடுக்கப்படுகிறது.

**மேலும் பல புதுத்திட்டங்கள் வருங்காலங்களில் நிறைவேறும்!**

அதனால்தான், இந்தத் தேர்தலையே ‘தமிழ்நாடு versus NDA’ – ‘தமிழ்நாடு அணி versus டெல்லி அணி’ எனச் சொன்னேன். நிறைய பேர்கூட, “ஏன் டெல்லி என்று சொல்கிறீர்கள்?” என்று கேட்டார்கள். இவர்களிடம் திரும்ப ஆட்சி சென்றால், டெல்லி ரிமோட் கன்ட்ரோல் ஆட்சிதான் தமிழ்நாட்டில் மறுபடியும் நடக்கும். நம்முடைய அனைத்துத் திட்டங்களும் நின்று போய்விடும். ஏற்கனவே அரசு தந்த காசைக்கூடத் திரும்பக் கேட்பார்கள்.

ஆனால், நாம் இப்போது இருக்கும் திட்டங்களோடு சேர்த்து, புதுத் திட்டங்களையும் நம்முடைய சூப்பர் ஸ்டார் தேர்தல் அறிக்கையில் சொல்லியிருக்கிறோம். ‘இல்லத்தரசி’ என்ற ஒரு வாக்குறுதியிலேயே எதிரிகள் எல்லாம் பார்த்து இன்றைக்கு புலம்பிக் கொண்டு இருக்கிறார்கள். இந்தத் திட்டத்தில் எவ்வளவு வழங்கப் போகிறோம்? எட்டாயிரம் ரூபாய்... இந்த கூப்பனை வைத்து, வீட்டிற்குத் தேவையான பொருட்களை நீங்கள் வாங்கிக் கொள்ளலாம்.

ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடனே உங்களின் முதல் கையெழுத்து எந்த திட்டத்திற்கு என்று அனைவரும் கேட்கிறார்கள்... இல்லத்தரசி திட்டத்திற்குதான் இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினின் முதல் கையெழுத்து இருக்கும்! மகிழ்ச்சியா?

அதேபோன்று, உங்களுடைய மகளிர் உரிமைத்தொகை இனி மாதம் ஆயிரம் இல்லை, இரண்டாயிரம் ரூபாய்! விடுபட்ட மகளிரையும் இணைத்து, உரிமைத்தொகையை கொடுக்கப் போகிறோம்! இந்த ஸ்டாலின் சொன்னால் செய்வான் என்பதற்கு ‘டிரெய்லராகத்தான்’ பிப்ரவரியில் சொல்லாமலே 5 ஆயிரம் ரூபாய் வழங்கினேன்.

**நடைமுறையில் உள்ள திட்டங்கள் விரிவாக்கம்!**

முதியோர் ஓய்வூதியமும் இனி மாதம் 2 ஆயிரம், மாற்றுத்திறனாளிகள் உதவித் தொகை இனி மாதம் 2 ஆயிரத்து 500 ரூபாய்.

புதுமைப்பெண், தமிழ்ப்பெண் கல்வி உதவித்தொகை இனி மாதம் ஆயிரத்து 500 ரூபாய்.

கல்லூரி மாணவர்கள் அனைவருக்கும் அடுத்த 5 ஆண்டுகளில் லேப்டாப்.

## தமிழ்நாட்டை ‘சூப்பர் ஸ்டார்’ ஆக்கிய இந்த ‘திராவிட மாடல்’ முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் ஆட்சி தொடர வாக்களிப்பீர்!

‘கலைஞர் கனவு இல்லம்’ திட்டம் உள்ளிட்ட திட்டங்களில் 10 லட்சம் வீடுகள் கட்டித் தரப் போகிறோம்.

காலை உணவுத் திட்டத்தை எட்டாம் வகுப்பு வரை விரிவுபடுத்தப் போகிறோம்.

மகளிர் தொழில் தொடங்க நிறையக் கடனுதவித் திட்டங்கள்.

மீன்பிடி தடைக்கால சிறப்பு நிவாரணம் இனி 12 ஆயிரம் ரூபாய்.

மீன்பிடி குறைவுக்கால சிறப்பு நிவாரணம் இனி 9 ஆயிரம் ரூபாய்.

இதெல்லாம் ஒரு சில சூப்பர்ஹிட் வாக்குறுதிகள் மட்டும்தான். மொத்தம் 50 பிரிவுகளில் 500-க்கும் மேற்பட்ட வாக்குறுதிகள் கொண்ட தொலைநோக்கு ஆவணமாக நம்முடைய தேர்தல் அறிக்கையை வெளியிட்டிருக்கிறேன். அடுத்த 5 ஆண்டில் அதையெல்லாம் நிறைவேற்றிவிட்டு, உங்களிடம் 2031 தேர்தலின்போது வாக்கு கேட்டு நான்தான் மீண்டும் வருவேன். இது இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினின் சத்தியம்!

> **“ தமிழ்நாடு முழுவதும் என்னுடைய இந்த பிரச்சார நிறைவு உரையைப் பார்க்கும் என்னுயிர் மக்களே... நாங்கள் ஆட்சிக்கு வந்து முதல் மூன்று ஆண்டுகளில் செய்த சாதனைகளைப் பார்த்தே, நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியாவிலேயே யாரும் பெற முடியாத நாற்பதுக்கு நாற்பது என்ற முழு வெற்றியைக் கொடுத்தீர்கள். அதே போன்று சட்டமன்றத் தேர்தலிலும் நாம் வரலாறு படைக்க வேண்டும். தமிழ்நாட்டின் தொடர் வளர்ச்சிக்காக எங்களுக்குத் தொடர்ச்சியான வெற்றியைத் தர வேண்டும். ”**

சின்ன வயதிலிருந்தே என்னைச் சுற்றி இருந்ததும் எனக்குத் தெரிந்ததும் அரசியல், அரசியல், அரசியல் மட்டும்தான். தலைவர் கலைஞரைப் பார்க்க, எங்கள் வீட்டிற்குப் பேரறிஞர் அண்ணா, மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்., நாவலர், இனமானப் பேராசிரியர் இப்படிப்பட்ட பெருந்தலைவர்கள் வந்து கொண்டே இருப்பார்கள். அப்படிப்பட்ட சூழலில் வளர்ந்ததால் மக்கள் பணி செய்யும் ஆர்வம் சின்ன வயதிலிருந்தே எனக்கு வந்துவிட்டது.

**எம்.ஜி.ஆர். எனக்கு வழங்கிய அட்வைஸ்!**

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள் கூட என்னைப் பார்த்து, “நீ என்ன இந்த சின்ன வயதிலேயே கட்சி வேலை பார்த்துக் கொண்டு இருக்கிறாய்? ஒழுங்காகப் படிப்பில் மட்டும் கவனம் செலுத்து. நான் உன் பெரியப்பாவாகச் சொல்கிறேன்” என்று எனக்கு அட்வைஸ் செய்தார். ஆனால், அவர் சொன்னபடி படித்து முடித்தாலுமே, என்னுடைய அரசியல் ஆர்வம் குறையவே இல்லை. ஒரு கட்டத்திற்கு மேல் வீட்டிலும் என்னுடைய அரசியல் ஈடுபாட்டைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அதனால்தான் இந்தியா முழுவதும் எமர்ஜென்சி அமல்படுத்தப்பட்டு இருந்தபோது, 23 வயது இளைஞனாக அதை எதிர்த்து ஊர் ஊராக நாடகங்கள் நடத்தினேன். தமிழ்நாட்டில் மிசா கொடுஞ்சட்டத்தில் கைதான 500 பேரில் நானும் ஒருவன் என்றால், கலைஞரின் மகன் என்பதற்காக நான் கைது செய்யப்படவில்லை; கட்சிக்காக நான் அப்போதே செய்த என்னுடைய பரப்புரை காரணமாகத்தான் கைது செய்யப்பட்டேன்.

**அரசியல் களத்தில் நிகழ்ந்த அடக்குமுறை தழும்புகள் என் உடம்பில் அப்படியே உள்ளது!**

இப்படி, அடிமட்டத்திலிருந்து களத்தில் உழைத்து, அடக்குமுறைகளுக்கு எதிராகப் போராடி, அடி உதை பட்டுத்தான் அரசியலில் வளர்ந்தேன். இன்றைக்கும் அந்தத் தழும்புகள் அனைத்தும் என் உடம்பில் அப்படியேதான் இருக்கின்றன. கோபாலபுரம் இளைஞர் தி.மு.க.-வில் தொடங்கி, சென்னை மேயர், ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர், இளைஞரணி செயலாளர், உள்ளாட்சித்துறை அமைச்சர், துணை முதலமைச்சர், தி.மு.க. பொருளாளர், சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர் எனப் படிப்படியாக, 60 ஆண்டுகாலம் போராட்டம் நிறைந்த பொதுவாழ்க்கையில் பயணித்துதான் நான் இந்த இடத்திற்கு வந்திருக்கிறேன்.

**என்னைப்போன்று இதுவரை எந்த முதல்வரும் நிகழ்ச்சிகளில் பங்கேற்றதில்லை!**

தமிழ்நாட்டு மக்களுக்காக மனசாட்சிக்கு உண்மையாக, என் சக்தியையும் மீறி உழைத்திருக்கிறேன். கொடுக்கப்பட்ட ஒவ்வொரு பொறுப்பிலும் என்னை நிரூபித்திருக்கிறேன். நான் மிகுந்த பணிவோடு சொல்கிறேன், இதுவரை தமிழ்நாட்டில் இருந்த முதலமைச்சர்களில், இந்த ஸ்டாலின் அளவிற்கு அதிக நிகழ்ச்சிகள், மாவட்ட பயணங்கள், கள ஆய்வுகள், கூட்டங்கள், திட்டங்களின் தொடக்கம் என்று யாருமே கலந்துகொண்டிருக்க மாட்டார்கள்! நான் என்னுடைய வீட்டில் இருந்ததை விட, களத்தில் மக்களுடனும், பயணத்திலும், கோட்டையிலும் இருந்ததுதான் அதிகம். இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாகத் தமிழ்நாட்டை உயர்த்த வேண்டும் என்ற ஒற்றை குறிக்கோளோடு உழைத்துக் கொண்டிருக்கிறேன்.

தமிழ்நாட்டுக்கு என ஒரு தனித்துவம் இருக்கிறது. ஒன்றிய பா.ஜ.க. அனைத்து மாநிலங்களையும் அவர்களால் கண்ட்ரோல் செய்துவிட முடியும் என்று நினைக்கிறார்கள். ஆனால், அவர்களுக்கு எப்போதும் ‘Out of Control’-இல் இருக்கும் ஒரே மாநிலம், நம்முடைய தமிழ்நாடுதான்!

ஏனென்றால் நாம், அகர முதல தொட்டு தாடிக்கிழவன் ப்ளட்டு! அகர முதல தொட்டு அறிஞர் அண்ணா ப்ளட்டு! அகர முதல தொட்டு தலைவர் கலைஞர் ப்ளட்டு!

**ஒவ்வொருவரும் நமது கூட்டணியை ஆதரிப்பீர்!**

இப்படிப்பட்ட பெருந்தலைவர்களால் வளர்த்தெடுக்கப்பட்ட இந்த ஸ்டாலினும், நம்முடைய தி.மு.க.வும் இந்த மண்ணில் இருக்கும் வரை, N.D.A.-ஆல் தமிழ்நாட்டின் D.N.A.-வைச் சிதைக்க முடியாது! அடுத்த 5 ஆண்டில், இந்தியாவின் நம்பர் ஒன் மாநிலமாக மட்டுமல்லாமல், தெற்காசியாவின் மாடல் மாநிலமாகத் தமிழ்நாட்டை நான் நிச்சயம் மாற்றிக் காட்டுவேன்! இது உறுதி... உறுதி... உறுதி..!

இந்தத் தேர்தல் மிக மிக முக்கியமான தேர்தல். அதனால் ஒவ்வொரு குடும்பத்திலும் அனைவருமே நம்முடைய தி.மு.க. கூட்டணிக்குத்தான் வாக்களிக்க வேண்டும்.

உரிமைத்தொகை, விடியல் பயணம் ஆகியவற்றில் பயனடையும் பெண்கள், உங்களுடைய பிள்ளைகளிடம் இதை எடுத்துச் சொல்ல வேண்டும். ‘நான் முதல்வன்’, லேப்டாப், புதுமைப் பெண், தமிழ்ப்புதல்வன் போன்ற திட்டங்களில் பயனடையும் இளைஞர்கள் – உங்கள் பெற்றோர்களிடம் திராவிட மாடல் ஆட்சி ஏன் தொடர வேண்டும் என்று எடுத்துச் சொல்லுங்கள்.

வீட்டில் இருக்கும் பெரியவர்கள் ‘தாயுமானவர்’ போன்ற திட்டங்களைச் சொல்லி, உங்களுடைய பேரப்பிள்ளைகளிடம் இந்த ஆட்சிதான் மீண்டும் வர வேண்டும் என்று புரிய வையுங்கள். அரசியல் விழிப்புணர்வு கொண்டவர்கள் – மாநில உரிமைகள், சமூக நீதி, மத நல்லிணக்கம் ஆகியவை காப்பாற்றப்பட வேண்டும் என்றால் தி.மு.க. தான் வர வேண்டும் என்று உங்கள் உறவினர்கள் மற்றும் நண்பர்களிடம் பேசுங்கள்.

**எப்போதும் உங்களுடன் இருப்பவன் உங்கள் ஆதரவை நாடி வந்துள்ளேன்!**

நீங்கள் பிரச்சாரம் செய்வது ஒரு கட்சிக்காகவோ, கூட்டணிக்காகவோ இல்லை; தமிழ்நாட்டின் எதிர்காலத்திற்காக! எனவே, ஒவ்வொரு வாக்காளரும், குறிப்பாக முதல் முறை வாக்களிக்கப் போகின்ற இளைஞர்கள், உங்கள் வாக்கின் மதிப்பையும் முக்கியத்துவத்தையும் புரிந்துகொண்டு வாக்களிக்க வேண்டும். உதயசூரியனுக்கும், கூட்டணிக் கட்சிகளுக்கும் உங்கள் ஆதரவை வழங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு விடைபெறுகிறேன். விடைபெறுகிறேன் என்றால், கூட்டத்திலிருந்து விடைபெறுகிறேன் என்று அர்த்தம். எப்போதும் உங்களுடன்தான் இருப்பேன்.

இவ்வாறு தலைவர், முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

## சொன்ன வாக்குறுதிகளையெல்லாம் நிறைவேற்றுவேன்; 2031 தேர்தலின் போதும் உங்களிடம் வாக்கு கேட்டு வருவேன்!